---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் (''அதிகாரசபை''), அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்பு இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு / இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக் களிலிருந்து எதிர்கால நலன்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் சந்தர்ப்பங்களின் போது அந்த சொத்துக்களின் கிரயத்தை நியாயமாக இனங்கண்டு உரிய சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டிய இருந்தமை மற்றும் அதன் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் பயன்படுத்துகின்ற திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யாத வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 818.27 மில்லியன் பெறுமதியுடன் 19 செயற்திட்டங்கள் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள், பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் அல்லது முதலீட்டு ஆதனங்களாக உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறித்துரைத்த பிரகாரம் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையும் அந்த மீதிகளுக்குரிய பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்படாதிருந்தமையாலும் மீளாய்வாண்டின் இலாபமும் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	பூர்த்தி செய்யப்படாத வேலையாக கணக்கீடு செய்யப்பட்ட செயற் திட்டங்களுக்குரிய பெறுமதி சரியான வகைப்படுத்தலின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் எந்தவொரு சொத்து அலகொன்று மீள் மதிப்பீடு செய்வதாயின் அதற்குரிய மொத்த சொத்துக்களின் வகுப்பு மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதிகார சபைக்கு 1998 – 2012 காலப் பகுதியின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 07 மோட்டார் வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 25.15 மில்லியனுக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மிகுதிக் கிரயம் ரூபா 66.1 மில்லியன்	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மொத்த சொத்து வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யும் தேவையினைக் கவனத் திற்கொண்டு தேவையான சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மொத்த சொத்து வகுப்பையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பெறுமதியான 43 வாகனங்கள் உரிய ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்படாமையால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி, கிரயம் மற்றும் நியாயமான பெறுமதி என்ற பெறுமதிகள் இரண்டையும் உள்ளடக்கியிருந்தது.		
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போதும் சொத் தொன்றின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதி மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அதன் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப் பெறுமதி தொடர்பாக எதிர்பார்த்தல் கடந்த ஆண்டினை விட மாற்றம் அடையுமாயின் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 1,067.04 மில்லியன் ஆன சொத்துக்களில் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சீராக்கி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை இனங்கண்டு இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்விற்கு உட்படுத்தி உரிய சீராக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் கணக்காண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பயன்தரு ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து தேவையான சீராக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல் தொடர்பாக ஏதாவது அவதானிப்பு கணப்படுமாயின் உரிய மீதிகளுக்காக இழப்பீட்டு பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த 09 செயற்திட்டங் களுக்கான பூர்த்தி செய்யப்படாதிருந்த பெறுமதி ரூபா 102.23 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டு முதல் பூர்த்தி செய்யப்படாத வேலைக் கணக்கின் கீழ் நிதிக் கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அந்த பூர்த்தி செய்யப்படாத வேலைகள் தொடர்பாக இந்த அறிக்கை திகதி வரையிலும் இழப்பீட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	இந்த செயற்திட்டம் தொடர்பாக இழப்பீட்டுப் பரிசோதனை மேற்கொண்டு உரிய சீராக்கங்கள் 2024 இன் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத வேலைகள் தொடர்பாக இழப்பீட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் 9(சீ) பந்தியின் பிரகாரம் அதிகார சபையால் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் முதலீட்டு ஆதனமாக கவனத்திற்கொள்ள முடியாதிருந்த போதிலும் ரூபா 493.55 மில்லியன்	இந்த ஆதனங்கள் தற்போதைய பயன்படுத்தும் எண்ணக்கரு மற்றும் சந்தை நிலைமையினைக் கவனத்திற் கொண்டு அந்த ஆதனங்களின் பெறுமதி கணக்கீட்டு நியமத்தின்	கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பெறுமதியான 02 சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலா நிர்மாணத்திற்காக உத்தேசிக்கப்பட்ட 03 காணிகள் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நிமய இலக்கம் 15 இன் பிரகாரம் அதிகார சபையின் சேவைப் பங்களிப்பு செயற் திட்டங்களுக்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 6,473.5 மில்லியன் ஆன வைப்புத் தொகையில் அத்திகதி வரை அந்த செயற்திட்டத்திற்காக அதிகார சபையால் செலவிடப்பட்ட செலவினத்தின் கூட்டுமொத்தம் ரூபா 3,883.8 மில்லியன் குறைக்கப்பட்டு மிகுதிப் பெறுமதியான ரூபா 2,589.7 மில்லியன் மீளாய் வாண்டின் இறுதியில் வைப்பு மற்றும் முற்பணமாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 33.4 இன் கீழ் நடைமுறைப் பொறுப்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமக ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பாகவும் நியமத்தில் காண்பிக்கப்படுகின்ற தேவையின் பிரகாரம் செயற்திட்டங் களிலிருந்து எழுகின்ற இலாப நட்டங்களை இனங்காண முடியாதிருந்ததுடன் பொறுப்புக்களையும் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 இன் பிரகாரம் சேவைப் பங்களிப்பு செயற் திட்டம் (Client Project) இற்குரிய வருமானம் தனித்தனியாக இனங் காணல் அல்லது சேவைப் பங்களிப்பு செயற்திட்டங் களிலிருந்து எழுகின்ற இலாப நட்டங்களை தனித் தனியாக இனங்காணும் திட்ட முறைமையொன்று அதிகார சபையால் பின்பற்றப்படுவதில்லை.	நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் சேவைப் பங்களிப்பு செயற்திட்டங்களுக்குரிய வருமானம் மற்றும் செலவினங்கள் தனித் தனியாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	இலங்கை நிதி அறிக்கையிடல் 16 இன் 22 இன் பிரகாரம் குத்தகைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் "சொத்துக்கள் பயன்படுத்தும் உரித்து கணக்கு" (Right of use Assets) அதன் மூலம் இனங்காண வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் 2020 ஆம் ஆண்டின் போது 05 வருடங்களுக்காக நிதிக் குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 255 மில்லியன் ஆன 28 மோட்டார் வாகனங்கள் நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் அதிகார சபையின் மோட்டார் வாகனப் பெறுமதியில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது.	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க சொத்துக்களை பயன்படுத்தும் உரித்துள்ள சொத்துக் கணக்கிற்கு 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் சரியாக காண்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2017 - 2021 காலப் பகுதியில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 381 சொத்து விடயங்களும் 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 389 சொத்து விடயங்களும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் பிரகாரம் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படாமல் பூச்சிய பெறுமதியாக நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டமையால் நிதி கூற்றுக் களில் சொத்துக்களின் மீதி குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே அந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படாமையால் இலாபமும் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	இந்த சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.	நன்கொடையாக கிடைக்கின்ற சொத்துக்கள் நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் கால ரீதியில் நியாயமான பெறுமதியில் மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	அதிகார சபையால் 2020 ஆம் ஆண்டின் போது நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 28 வாகனங்கள் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகைப் பெறுமதியான ரூபா 154.12 மில்லியன் கணக்குகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	அதிகார சபையால் 2020 ஆம் ஆண்டில் நிதிக் குத்தகைத் திட்டடத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 28 வாகனங்களுக்காக உரிய குத்தகை பொறுப்புக்கள் 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரை கணக்குகளில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 17 இற்கு இணங்க காண்பிக்கப் பட்டிருந்ததுடன் அதிகார சபையால் 2023 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடாந்த கணக்குகளில் அந்தக் குத்தகைப் பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படட்டுள்ளது.	குத்தகைப் பொறுப்புக்கள் நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	அதிகார சபையால் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்களில் வரிகள் இனங்காணப்படா திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் வரைவு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வரி அடிப்படையில் ரூபா 1,180.46 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான நிதி அறிக்கையின்	உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வரி நட்டம் 06 வருட கால எல்லை வரை முன்கொண்டு செல்லும் இயலுமை காணப்பட்டதன் காரணமாக மேற்கூறப்பட்ட வரி	உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி அடிப்படை யிலான இலாபம் அல்லது நட்டதை இனங் காண்பதற்கு கணக்கீட்டு

	பிரகாரம் வரி அடிப்படையின் கீழ் ரூபா 165.13 மில்லியன் இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 81(e) இன் பிரகாரம் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் 06 வருட கால எல்லைவரை முன் கொண்டு வரக்கூடிய பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வரி இலாபத்தின் (Unused Tax Losses) இழப்பு மற்றும் காலாவதியாகின்ற திகதி தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தா மையால் வருடாந்த வரி கடப்பாடு தொடர்பாக கணக்காய்வு விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டிருந்தது.	அடிப்படையில் சீராக்கப்பட்ட வியாபார இலாபத்திற்குரிய வரி நட்டத்தின் மீதியின் இருப்பு வரி நட்டம் ஒன்று காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது வரி செலுத்தும் தேவை யொன்று காணப்படவில்லை. பயன்பாட்டிற்கு எடுக்கப்படடாத வரி நட்டங்களின் இருப்பு மற்றும் காலாவதியான திகதி தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட 02 வீடமைப்பு திட்டங்களின் கிரயம் இருப்பு பெறுமதியில் உள்ளடக்கப்படாதிருந்தது டன் அந்த திட்டங்களுக்குரிய வீடுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 151.6 மில்லியன் ஆனமையால் இருப்புப் பெறுமதி மற்றும் வருடாந்த இலாபம் அப் பெறுமதியால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	“2022 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட 02 வீடமைப்புத் திட்டங்களாக காண்பிக்கப்பட்ட சங்ஹிந்த செவன – கொலன்னாவ மற்றும் லக்ஹிரு செவன மாளிகாவத்த வீடமைப்பு திட்டத்தின் ஒரு பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக அவற்றை நடைமுறை வேலைக் கணக்கின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக” பிழையான பதில் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தி செய்து நபர்கள் குடியிருந்த வீடுகளின் கிரயம் உரித்து மாற்றல் விற்பனையாக கணக்கீடு செய்யப்படும் வரை இருப்பு பெறுமதியில் உள்ளடக்குதல் வேண்டும்.
(உ)	18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பூர்த்தி செய்யப்படாத வேலைக் கணக்கில் ரூபா 13.86 மில்லின் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த ஒதுக்கீடு களுக்கான அடிப்படை, ஒதுக்கீட்டு விகிதம், வருடாந்த ஒதுக்கீடுகள் போன்ற எந்த கொள்கையும் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2004 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றி பேணிச் செல்லப்பட்டுள்ள இந்த மீதி தொடர்ந்தும் கணக்கீடுகளில் பேணிச் செல்லப்படுகின்றமை தொடர்பாக தேவையான விடயங்களைக் கண்டறிந்து அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் 2023 ஆம் ஆண்டில் கணக்கீடுகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	குறித்துரைத்த அடிப்படை யின்றி ஒதுக்கீடுகள் மேற் கொள்ள முடியாதிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(ஊ)	1979 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்ட சகல வீடமைப்பு திட்டங்கள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 601,613 மில்லியன் ஆன அதிகார சபையின் அபிவிருத்தி செலவினம், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவ மட்டத்தில் அறிக்கையிடப்பட்ட பின்னர் நிதிக் கூற்றுக்களின் மட்டத்தில் சொத்துக்கள் வகைப்படுத்தலில் இனங் காண்பதற்காக பேரேடு தயாரிக்காமை யால் நடைமுறை வேலை வாடிக்கை யாளர்களின் செயற்திட்டங்கள், முதலீட்டு ஆதனங்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் போன்ற 05 சொத்து விடயங்களின் பெறுமதியின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	இது தொடர்பாக கணக்கீட்டு முறைமையில் ஏதாவது வேறுபாடுகள் மேற் கொள்வதற்குத் தேவை யாயின் அது தொடர்பாக கண்டறிவதற்காக குழுவொன்று நியமிப்பதற்கும் அதற்குரிய மேலதிகமான ஆலோசனையை அரசாங்க கணக்காய்வு பிரிவின் மூலம் பெற்று 2024 இன் கணக்குகளுக்கு உரிய மீதிகள் திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அடிப்படைக் கணக்கீட்டு திட்டத்தின் அடிப்படையில் பேரேடு மற்றும் கணக்கு முறைமைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(எ)	அதிகார சபையின் வாடகை பேரேட்டின் படி 1981 - 2021 காலப் பகுதியில் ரூபா 1,233.42 மில்லியன் பெறுமதியுடைய 39 ஆதனங்கள் 30, 50 மற்றும் 99 வருட காலத்திற்காக வெளி நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கும் வாடகை அடிப்படையின் கீழ் வழங்கி வாடகை வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அந்த சொத்துக்கள் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்படாமையால் அதிகாரசபையின் சொத்துக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இந்த 39 ஆதனங்கள் தொடர்பாக சொத்து மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்களை கணக்குகளில் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வாடகை வருமானம் உழைக்கின்ற சொத்துக்கள் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஏ)	நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 28 இன் பிரகாரம் குத்தகைக் கால எல்லை குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத பெறுமதி ரூபா 3,541.2 மில்லியனான 233 குத்தகைச் சொத்துக்கள் காணப்பட்டதுடன் அதில் 14 குத்தகைச் சொத்துக்களுக்குரிய குறித்துரைத்த அடிப்படையின்றி ரூபா 5.04 மில்லியன் மீளாய்வாண்டின் இலாபத்திலும், 13.43 மில்லியன் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பிலும் சீராக்கப்பட்டிருந்ததுடன் குத்தகை கால எல்லை 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த தனியார் கம்பனிக்குரிய ரூபா 5.57 மில்லியன் குத்தகை பொறுப்பு மீதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது பிற்போட்ட	குத்தகை கால எல்லை இனங்காணப்படாத குத்தகைச் சொத்துக் களை இனங்கண்டு சரியாக கணக்குகளில் வைப்பதற்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது.	குத்தகை சொத்துக்கள் தொடர்பாக சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

	குத்தகை வாடகை வருமான மாக இலாபத்தில் இனங்காண வேண்டிய 121 குத்தகைச் சொத்துக்களுக்குரிய ரூபா 42.4 மில்லியன் தொகை இலாபத்தில் இனங் காணப்படா திருந்தமையாலும் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு பிற்போட்ட குத்தகை வாடகைப் பொறுப்புக்கள் ரூபா 5.57 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இலாபம் 47.44 மில்லியனால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.		
(ஐ)	2020 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போது கையளித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்தில் 12 செயற்திட்டங்களில் 27 ஏக்கர் 15.01 பேர்ச் ஆன 12 காணிகள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பம் வரையில் அதிகார சபைக்கு கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த கொழும்பு மாவட்டத்தின் 06 வீடமைப்பு திட்டங்களுக்குரிய காணிகள் 18 ஏக்கர் 03 றூட் 11.56 பேர்ச் ஆன 06 காணிகள் அதாவது 18 செயற்திட்டங்களுக்குரிய காணிகள் 45 ஏக்கர் 03 றூட் 26.57 பேர்ச் காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 16 இன் கீழ் வருகின்ற அதிகார சபையின் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் இருப்பு பெறுமதியின் கிரயம் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை.	காணி கையேற்கும் நடவடிக்கைகள் முடிவடைந்த மற்றும் காணி கையளித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு உள்ள வீடமைப்புத் திட்டங்களுக்குரிய காணிகளின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு அவவற்றை இறுதிக் கணக்குகளில் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும்.	பூர்த்தி செய்யப்பட்ட வீட்டு இருப்புக்களின் பெறுமதியில் கிரயம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஒ)	நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 16 இன் கீழ் ரூபா 6,600.51 மில்லியன் கிரயத்தில் கணக்கு வைக்கப்பட்டிருந்த 03 வீடமைப்புத் திட்டங்களின் வீடுகளில் குடியிருப்பாளர்கள் குடியிருந்த போதிலும் காணி கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 05 ஏக்கர் 07 றூட் 16.98 பேர்ச் அளவான காணி நிதிக் கூற்றுக்களின் முதலீட்டு ஆதனமாக இனங்காணப்படாதிருந்ததுடன் கட்டிடங்களை மாத்திரம் நிர்மாணிக்கும் கிரயம் பூர்த்த செய்யப்பட்ட வீட்டு இருப்பின் கீழ் தொடர்ந்தும் அறிக்கையிடப்பட்டிருந்தது.	காணி கையேற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உரிய காணிகளின் மதிப்பீட்டு அறிக்கையினை பெற்று அவற்றை இறுதிக் கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.	நிருவாக உரித்து உள்ள காணிகள் முதலீட்டு ஆதனமாக சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

(ஓ)	முதலீட்டு ஆதனமாக இனங்காண வேண்டியிருந்த ரூபா 2.52 மில்லியன் பெறுமதியான தலாத்துஓய வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் கிரயம், பூர்த்தி செய்யப்பட்ட வீட்டு இருப்பில் சேர்க்கப்பட்டமையால் அப்பெறுமானத் தால் இருப்பு மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு முதலீட்டு ஆதனங்கள் பெறுமதி குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	2023 இன் இறுதிக் கணக்குகளில் இது தொடர்பாக சரி செய்தல் மேற்கொள்ளப் படும்.	சரி செய்தல் கால ரீதியில் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஔ)	பம்பலப்பிட்டி மிலாகிரியில் அமைந்து காணப்படுகின்ற 0.2185 ஹெக்டேயர் அளவினை உடைய அதிகார சபைக்குரிய காணி நானாவித அபிவிருத்தி செயற்திட்டமாக ரூபா 620 மில்லியன் குத்தகைப் பெறுமதியில் 99 வருட வாடகை அடிப்படையின் கீழ் தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி யுடன் 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி குத்தகைப் பெறுமதியில் 25 சதவீதம் செலுத்தி மிகுதி 75 சதவீதம் மற்றும் 2.5 சதவீத வட்டித் தொகையும் 30 வருட காலத்தில் சமமான தவணையாக செலுத்தி பூர்த்தி செய்வதற்கு இணங்கி யிருந்தது. அதன் பிரகாரம் 2022 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் முதலாவது 25 சதவீத பெறுமதியாக ரூபா 155 மில்லியன் கிடைத்திருந்ததுடன் மிகுதி 75 சதவீதப் பெறுமதியான ரூபா 465 மில்லியன் தொகை 2025 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரையில் கிடைக்க வேண்டியிருந்தது.இந்த கிடைக்க வேண்டிய பெறுமதி உரிய பிரகாரம் கிடைக்க வேண்டிய வட்டி மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வருடத்திற்கு ரூபா 40,000 வீதம் பெற வேண்டிய நில வாடகை தொடர்பாக கணக்கீடு செய்யப்படாமையால் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை.	இந்த குத்தகை கொடுக்கல் வாங்கல்கள் 2025 ஆகஸ்ட் மாதத்தின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது இந்த கொடுக்கல் வாங்கல்களை இரத்துச் செய்வதற்காக உரிய கம்பனி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை ஒன்றை விட்டுள்ளது.	வருமானங்கள் கால ரீதியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை வலுப்படுத்தல் வேண்டும்.
(க)	பல்வேறு அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைத்த கோரிக்கையின் படி அவசர சமூகத் தேவையொன்றாக (மீள் குடியமர்த்துதல்) அமுல்படுத்தப் பட்டிருந்தத பல்வேறு வீடமைப்புத் திட்டங்களில் வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடல்	வீடுகளை வழங்குதல் தொடர்பாக அதிகார சபையின் கணக்கு கொள்கை யொன்றாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 இற்கு இணங்க வீடுகளின் பௌதீக உரித்து இறுதித் தரப்பினருக்கு	வருமானங்களை கால ரீதியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை வலுப்படுத்துதல்

	முற்பணமாக அல்லது ஒரே தடவையில் பணம் செலுத்திய பின்னர் வீடுகள் கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் 2014 - 2022 காலப் பகுதியில் 06 அரச நிறுவனங்களுக்குரிய 819 வீட்டு அலகுகளை வழங்கும் போது மொத்த பணமும் அறவிடப்படாமல் கூட்டுமொத்த மாக ரூபா 527.85 மில்லியன் தொடர்ந்தும் அறவிடப்படாதிருந்தமையால் மற்றும் அப்பெறுமதி கணக்கீடு செய்யப்படா மையால் வருமானம் மற்றும் சொத்துக்கள் அப் பெறுமதியால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது.	(Customer) இற்கு மாற்றப்படு கின்ற சந்தர்ப்பத்தின் போது ஆக பதில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதிலும் அந்த கொள்கையின் பிரகாரம் பௌதீக உரித்து மாற்றப்பட்டிருந்த வீடமைப்புத் திட்டங்களில் இருந்து அறவிட வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வில்லை.	வேண்டும்.

1.5.3 ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகுதிக்குரிய துணைக் கம்பனியான பெலியகொட வெயாஹவுஸ் கம்பனியில் ரூபா 74.71 மில்லியன் சொத்துக்களும், ரூபா 242.14 மில்லியன் உரிமை மூலதனம் மற்றும் ரூபா 25.74 மில்லியன் பொறுப்புக்களும், ரூபா 193.17 மில்லியன் நடைமுறைக் கணக்கு மீதியும் காணப்பட்டதுடன் இந்தக் கம்பனியைக் கலைப்பதற்காக கலைப்பாளர் ஒருவர் 2017 ஆம் ஆண்டின் போது நியமித்து கணக்குகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரையும் அதாவது 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படா திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் கணக்குகளின் அடிப்படையா கக் கொண்டு தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிக் கூற்றுக்களில் தொகுதிகளுக்குரிய துணைக் கம்பனி தொடர்பான குறிப்பு 42 இல் இந்தக் கம்பனிக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அல்லது கலைத்தல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	பேலியகொட வெயா ஹவுஸ் கம்பனி முடிவுறுத்துதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்வதற்கு கலைப்பாளருக்கு பல சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது கலைப்பாளரால் கணக்குகளை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பூர்த்தி செய்து இறுதிக் கணக்குகளை வழங்கு வதற்கு தீர்மானித்துள்ளதாக எங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.	கலைத்தல் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்காக தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியால் 2022 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் படாதிருந்தமையால் அங்கீகரிக்கப்படாத மற்றும் கணக்காய்வு செய்யப்படாத லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியின் நிதிக்	அதிகார சபையால் தொகுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது லங்கா ரெஸ்ட் ஹவுஸஸ் கம்பனியின் 2022 ஆம் ஆண்டிற்கான	துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் கால ரீதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு தேவையான

	கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.	கணக்குகள் கணக்காய்வு செய்யப்படாதமையின் காரணமாக அந்த ஆண்டிற்குரிய வரைவு நிதிக்கூற்றுக்களின் அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் சமமான நிலைமையின் கீழ் சமமான கொடுக்கல் வாங்கல் மற்றும் ஏனைய வைகளை மேற்கொள்வதற்காக ஒரே வகையான கணக்கீட்டுக் கொள்கை பயன்படுத்தி நிருவாக தரப்பினரால் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் நகர முதலீடு மற்றும் அபிவிருத்தி கம்பனிக்குரிய தொகுதி கணக்குகளில் ரூபா 0.5 மில்லியன் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் காண்பிக்கப்பட்டதுடன் தொகுதியின் துணைக் கம்பனியான நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வோட்டர்ஸ் ஏஜ் கம்பனியின் பிற்போட்ட வரி பொறுப்பாக பிற்போட்ட வரிச்சொத்துக்கள் கழிக்கப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 878.7 மில்லியன் குறிப்பு இலக்கம் 32 இன் கீழ் தொகுதியின் பிற்போட்ட வரி பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் தனித் தனியாக காண்பிக்கும் வகையில் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஒரே வகையான கணக்கீட்டுக் கொள்கை பயன்படுத்தி ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

விடயம்	தொகை ரூபா மில்லியன்	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
முதலீட்டு ஆதனங்கள்	6,800	அகற்றுவதற்கான காரணம் அல்லது அகற்றியதன் பின்னர் உள்ளடக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான தகவல்கள்	ரூபா 6,800 பெறுமதியான இந்த 45 ஆதனங்களுக்குரிய தகவல்களை பரீட்சிக்கும் நடவடிக்கைகள் காணிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படு வதுடன் அதற்குரிய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உரிய தகவல்களை விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வீடமைப்புத் திட்டங்களில் நீர் கட்டண பட்டியல் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக முகாமைத்துவ சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் புனர்வாழ்வு வீடமைப்பு திட்டங்களின் முகாமைத்துவ சபை ஸ்தாபிக்கப்படாமையினால் நீர் நுகர்விற்காக ஒட்டு மொத்த பட்டியல்களையும் செலுத்தி தீர்த்தல் அதிகார சபையின் மூலம் மேற்கொண்டு வீட்டு அலகுகளுக்காக உரிய பிரகாரம் கட்டணம் தீர்மானித்து பட்டியல் விநியோகிப்பதன் மூலம் அதிகார சபைக்கு பணம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2025 யூன் 30 இல் உள்ளவாறு 19 வீடமைப்புத் திட்டங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 312.6 மில்லியன் ஆன நீர் பட்டியலை அறவிடுவதற்கு இருந்த போதிலும் அந்த பணத்தை அறவிடும் செயல் முன்னேற்றம் நலிவான நிலையில் காணப்பட்டது.	சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் அறவிடும் பிரிவினால் நீர் துண்டித்தல் மேற்கொண்டு நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அதிகார சபை அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	பன்னிப்பிட்டி வீர மாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளை உடைய வீடமைப்புக் கட்டிடத் தொகுதியில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினருக்காக வழங்கப்பட்டிருந்த 70 வீட்டு அலகுகளில் இருந்து 2022 திசெம்பர் 31 வரையில் அறவிட வேண்டிய நீர்க் கட்டணம், முகாமைத்துவக் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிவாயுக் கட்டணமாக கூட்டுமொத்தமாக ரூபா 4.78 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	உரிய வீட்டு அலகுகளின் மின்சாரம், நீர் , எரிவாயு மற்றும் நிர்வாக செலவினங்களின் நிலுவையாகக் காணப்படுமாயின் வீட்டு அலகுகளை மீண்டும் கையளிக்கும் திகதி வரையிலும் மொத்த தொகை அறவிடப்பட்ட பின்னர் உரிய வீடுகள் பூட்டி வீடமைப்புத் திட்டத்தை முகாமையாளரால் பெற்றுக் கொள்ளுதல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.	இந்த வீட்டு அலகுகளுக்காக அதிகார சபைக்கு அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை சபையினால் அங்கீகரித்து சபையினால் நியமிக்கப்பட்டி குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரையின்	நிலுவைப் பணத்தை செலுத்துமாறு உரிய தரப்பினருக்கு கடிதம் மூலம்	அதிகார சபைக்கு அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு தேவையான

	படி புனர்வாழ்வு வீடமைப்பு திட்டங்களுக்காக பொதுத் திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டிருந்த நிதியினை மீள செலுத்துதல் மற்றும் வீடமைப்புத் திட்ட செலவினங்களை தீர்த்து வைப்பதற்கான திட்ட உபாயமாக வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளில் இருந்து 10 சதவீத அளவு ஒன்று விற்பனை செய்வதற்கு 2010 ஆம் ஆண்டின் போது அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4.5 மில்லியன் சலுகை விலையில் 15 வருடங்களில் அறவிடும் அடிப்படையில் 124 வீடுகள் வழங்கப்பட்டதுடன் கொளம் திட்ட சரசவி உயன வீடமைப்புக் கட்டிடத் தொகுதியில் 43 வீடுகளுக்கு உரியதாக மாத்திரம் அதிகார சபைக்கு ரூபா 17 மில்லியன் தொகை 2025 ஆகஸ்ட் 25 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்தது.	அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக பதிலளிக்காது இருந்த வீட்டு நலனாளிகளின் வீடுகளுக்கு அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள சேவை (நீர் சுத்திகரித்தல்) நிறுத்துவதற்கு முதலாவது கட்டம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 127.93 மில்லியன் பெறுமதியுடைய பெற வேண்டிய மீதியை அறவிவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த மீதிகளை தனிப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான சீராக்கங்கள் 2024 இன் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	மீதிகளை இணக்கம் செய்து விரைவாக முடிவுறுத்தி தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,726 மில்லியன் ஒப்பந்தக் காரருக்கு செலுத்த வேண்டி இருந்ததுடன் அதில் ரூபா 236 மில்லியன் தொகை 05 வருடங்களை விஞ்சிய செலுத்த வேண்டிய பட்டியல் ஆகவும் இந்த பட்டியல்களை தீர்த்து வைப்பதற்காக முறையான மற்றும் தொடர்ச்சியான வேலைத் திட்டம் ஒன்று அதிகார சபையால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த மீதி தற்போது பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பெறுமதியான ரூபா 236 மில்லியனுக்கு உரிய மீதிகளுக்காக சகல சீராக்கங்களும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகுதி சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.	மீதிகளை இணக்கம் செய்து விரைவாக முடிவுறுத்தி தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட பெறுமதியுடனான	இந்த மீதிகள் தொடர்பாக இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான சீராக்கங்கள் 2024	மீதிகளை இணக்கம் செய்து விரைவாக முடிவுறுத்தி தீர்த்து வைப்பதற்குத்

	கூட்டுமொத்தமான ரூபா 4.77 மில்லியன் ஆன 03 கணக்கு மீதிகளும், 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான பெறுமதியுடன் ரூபா 223.65 மில்லியன் ஆன 08 கணக்கு மீதிகளும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 228.42 மில்லியன் ஏனைய வழங்குனர்கள், வைப்புக்கள் மற்றும் முற்பண கணக்கு மீதிகள் தீர்த்து வைக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.	இன் கணக்குகளில் மேற்கொள்ளப்படும்.	தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 40.78 மில்லியன் செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியல்களில் ரூபா 2.27 மில்லியன் தொகை 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடை யிலான காலம் முதல் தீர்த்து வைப்பதற்கு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த சகல பெறுமதிகளையும் பரீட்சித்து மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் அந்த சீராக்கங்கள் 2024 இன் இறுதிக் கணக்குகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மீதிகளை இணக்கம் செய்து விரைவாக முடிவுறுத்தி தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்கமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம்			
(i)	II பகுதியின் 8 (ஏ) பிரிவு	அபிவிருத்தி பிரதேசங்களில் மூலதன அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அபிவிருத்தி திட்டம் பூர்த்தி செய்யப்படாது இருந்த பிரதேசங்களுக்காக மொத்த திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட செயல் நடவடிக்கைகளில் சில பின்னடைவுகள் அறிக்கையிடப்பட்டிருந்தது.	அபிவிருத்தி பிரதேசங்களில் மூலதன அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம் நியமங்களுடன் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் கால ரீதியில் எடுக்கப்படல் வேண்டும்.

(ii)	II பகுதியின் 8 (ஒ) பிரிவு	அபிவிருத்திப் பிரதேசங்களில் சுற்றாடல் நிலைமையினை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான முன்மொழிவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	அபிவிருத்திப் பிரதேசங்களில் சுற்றாடல் அபிவிருத்திக்கு தேவையான உபாய வழிகள் மற்றும் செயற்திட்டங்கள் இனங் காணலும் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிப் பொறுப்பாகும். இந்த திட்டம் மூலம் இனங்காணப்படு கின்ற கால ரீதியிலான திட்டங்கள், பொது மக்களுக்கான திறந்த களியாட்ட நில இடங்களை திட்டமிடல் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் இனங்காணப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் அவற்றை அமுல்படுத்துதல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. விசேடமாக பசுமை கட்டிட பிரமாணங்களை அமுல்படுத்தலை விசேடமாகக் காண்பிக்க முடியும். எனினும் 2021 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னர் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலமை இந்த செயற்பாடுகளின் பின்னடைவுக்கு காரணமாக இருந்தது.	தேவையான முன்மொழிவுத் திட்டம் கால ரீதியில் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் II பகுதியின் 8 (அ) (i) பிரிவு	சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் சேவைகளைக் கவனத்தில் கொண்டு அபிவிருத்திப் பிரதேசங்கள் அல்லது பகுதிகளுக்காக அபிவிருத்தி திட்டம் தயாரிக்க வேண்டிய போதிலும் வெளியிடப்பட்ட 98 அதிகாரப் பிரதேசங்களுக்காக 62 அபிவிருத்தித் திட்டங்கள் மாத்திரம் தயாரிக்க பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டின் போது வருடத்திற்கு 22 அபிவிருத்தித் திட்டங்கள் வீதம் 2023 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட பிரதேசங் களுக்காக அபிவிருத்தித் திட்டம் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.	அபிவிருத்தித் திட்டங்களை கால ரீதியில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270 (ஆ) பிரிவு	வியாபார நடவடிக்கைகள் ஒவ்வொரு ஆண்டிற்கும் கைவிடப்படுகின்ற கம்பனியின் நீதிமன்றத்தினால் கணக்குகளை தீர்த்து வைக்க முடியும். எனினும் துணைக் கம்பனியாக அதிகார சபையால் 2014 நவம்பர் 21 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு கூட்டிணைக்கப்பட்ட பின்னர் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளாது இருந்த நகர முதலீட்டு மற்றும் ஆதன வியாபார தனியார் கம்பனி, நகர முதலீட்டு மற்றும் ஹொட்டல் அபிவிருத்திக் கம்பனி, ஓய்சாட் (Orchard) நகர வீடமைப்பு அபிவிருத்திக் கம்பனி மற்றும் வோட்டர்ஸ் ஏஜ் ஹொட்டல் அபிவிருத்திக் கம்பனி என்ற கம்பனிகள் தற்போது வரையில் செயற்படாது இருந்த போதும் அதிகார சபையால் மேற்கூறப்பட்ட பிரிவுகளின் பிரகாரம் கணக்குகளை தீர்த்து மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த கம்பனியின் கணக்குகள் தீர்த்து மூடப்பட்டு அந்த கம்பனியின் பெயர் பதிவேட்டில் இருந்து பதிவழிப்பதற்காக கம்பனிப் பதிவாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய நிறுவனங்களுடன் தொடர்பினை பேணி இந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 01/2021(iii) ஆம் இலக்கம்) இன்மூலம் திருத்தப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 2.3 ஆம் பந்தி	அதிகார சபையினால் செயற்பாட்டுக் கைநூல்களுக்கு உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுய நிர்வாகம் மற்றும் நிதி கையேடுகள் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் அதன் பிரகாரம் நிர்வாகம் மற்றும் நிதிசார் கைநூல் அங்கீகரித்துக் கொள்ளப்	இது தொடர்பாக பதிலளிக்கப்பட வில்லை.	அதிகார சபைக்காக சுய நிர்வாகம் மற்றும் நிதி கைநூல் அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பட்டிருக்கவில்லை.		
(உ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப் படுத்தப் பட்ட செயற்பாட்டுக் கைநூல்			
(i)	5.3 ஆம் பந்தி	கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையின் நிதி நிலமைக் கூற்றுக்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் வரிக்குப் பின் இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் திரட்டு நிதியத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழான செயற்திட்டத்திற்கு அதிகார சபையின் காணி ஒன்று தனியார் கம்பனிக்கு வாடகை அடிப்படையில் வழங்கிய தற்காக இணங்கப்பட்ட பிரகாரம் வரி வருமானத்தில் ரூபா 500 மில்லியன் மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா 2,335 மில்லியன் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட அனுப்புதலுக்கு மேலதிகமாக எந்தவொரு தொகையும் திரண்ட நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக பதிலளிக்கப்படவில்லை.	கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்று தொடர்பாக பரீட்சிக்கப்பட்ட பின்னர் வரிக்குப் பின் இலாபத்தில் ஆகக் குறைந்தது திரண்ட நிதியத்தில் 30 சதவீதம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	7.7 ஆம் பந்தி	துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் துணைக் கம்பனிகளின் செயலாற்றலை மேற்பார்வை	துணைக் கம்பனியின் மீளாய்வுக் கொள்கை தயாரித்து உயர் முகாமைத்துவத்தின் அவதானிப்புக்காக	துணைக் கம்பனியின் மீளாய்வு செய்யப்பட்ட கொள்கையை

செய்வதற்கான வசதிகள் வழங்கியிருந்த கட்டமைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் எந்த ஒரு துணைக் கம்பனிக்காவும் அதிகார சபையில் அவ்வாறான திட்ட முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட வில்லை.	அனுப்பப்பட்டுள்ளது.	விரைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் தொகுதியினதும், அதிகார சபையினதும் முறையே ரூபா 3,479.86 மில்லியன் மற்றும் ரூபா 2,667.95 மில்லியன் இலாபம் அறிக்கையிடப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 798.59 மில்லியன் மற்றும் ரூபா 288.30 மில்லியன் ஆனமையால் முறையே தொகுதியினதும் அதிகார சபையினதும் ரூபா 2,681.27 மில்லியன் மற்றும் ரூபா 2,379.65 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நடுத்தர வருமான நலனாளிகளுக்கான வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 668.10 மில்லியனால் உயர்வடைந்து சென்றமை மற்றும் வட்டி வருமானம் மற்றும் இலாபப் பங்கு ரூபா 1,219.46 மில்லியனால் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கொழும்பு 12 லண்டன் மார்க்கெட் சந்தைத் தொகுதியில் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 111 கடைகளில் இருந்து 13 கடைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடாடு இருந்த போதிலும் கைச்சாத்து இடப்பட்ட வாடகை உடன்படிக்கை, உடன்படிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்படாது இருந்தமையும் பல்வேறு அளவுகளை உடைய இந்த கடைகளில் ரூபா 1,000 ஆக சமமான வாடகை அறவிடப்பட்டிருந்த போதிலும் வாடகை செலுத்தாத கடை உரிமையாளர் களிடம் இருந்து இதுவரை ரூபா 5.5 மில்லியன் அறவிட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த 111 கடைகளில் 05 கடைகள் மாத்திரம் தற்போது திறக்கப்பட்டுள்ள	இந்த செயற்திட்டத்தின் செயற்படு நிலையில் உள்ள 83 வாடிக்கையாளர்கள் மற்றும் செயலிழந்த நிலையில் உள்ள 01 வாடிக்கையாளர் காணப்பட்டதுடன் இந்த வாடிக்கையாளர்களும் 4 – 5 கடைகளுக்கு இடையிலான அளவில் தவிர ஏனைய வியாபார கடைகள் மூடப்பட்டுள்ள நிலைமையில் உடன்படிக்கைப் பிரிவுகளின் பிரகாரம் மாதாந்த வாடகைத் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாத பணியாக உள்ளது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை மற்றும் தொடர்ந்தும் பெற முடியாது இருந்த நிலுவைப் பணத்தை அங்கீகாரத்துடன்	கடைகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மையால் மூடப்பட்டுள்ள சில கடைகள் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றமை மற்றும் கடைகளுக்கு உள்ளே துண்டுக் கழிவுப் பொருட்கள் வைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த நிலமையை சரி செய்து கடைகளை ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ) நகர அபிவிருத்தி வலயமாக வெளியிடப்பட்டுள்ள கொலன்னாவ இராஜகிரிய பிரதேசத்தில் 6.451 ஏக்கர் அளவான காணி அதிகார சபையால் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் காணி கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் காணிக்காக சட்ட ரீதியான உரித்து இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அதிகார சபைக்கு கையளிக்கப்படாது இருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 4.46 மில்லியன் ஆகும். எனினும் கொலன்னாவ எண்ணெய் களஞ்சியக் கட்டிடத் தொகுதிக்கு அருகில் அமைந்துள்ள இந்தக் காணி கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான சாத்தியவள ஆய்வு அல்லது கழிவுப் பொருள் அகற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் விநியோகிக்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் பெறப்பட்டிருக்க வில்லை. மேலும் இந்தக் காணி கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக பயன்படுத்தப்படுவதன் காரணமாக பொருத்தமான அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றை இனங்கண்டு அமுல்படுத்துவதற்கு அதிகார சபை இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மேற்கூறப்பட்ட காணிக்காக 6(1) பிரிவின் கீழ் நன்கொடைப் பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் முறையான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படல் வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவு	03 வாகனங்கள் தொலைந்து போயிருந்ததுடன் தகவல்கள்	அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பௌதீக

முறைமையின் அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 23 வாகனங்கள் பௌதீக ரீதியில் அதிகார சபையில் காணப்படாது இருந்ததுடன் அதில் 03 வாகனங்கள் தொலைந்துபோய் இருந்தமையும் தகவல்கள் கண்டறிய முடியாத 20 வாகனங்கள் காணப்படுகின்றமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	கண்டறியமுடியாதிருந்த 20 வாகனங்களில் 07 மோட்டார் கார்கள் மற்றும் 07 மோட்டார் வாகனங்களாகவும், 06 ஏனைய வாகனங்கள் (Land Vehicle) ஆக இருந்தமையும் இனங்காணப்பட்டுள்ளது.	ரீதியில் காணப்படாத வாகனங்களை குறித்துரைத்த ரீதியில் அகற்றப்பட்டிருந்ததா எனவும் அவ்வாறு இல்லையாயின் அந்த வாகனங்களின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபைக்குரிய வீடுகள், செயற்படு நிலையில் உள்ள கடைகளின் வாடகை உரிமையாளர்கள் 4716 மற்றும் செயற்பாட்டில் இல்லாத வாடகை உரிமையாளர்கள் 3538 காணப்படுவதுடன் அதன் பிரகாரம் மொத்த வாடகை உரிமையாளர்களில் 43 சதவீதம் அளவில் செயலிழந்த நிலைமையில் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2025 யூன் 30 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 939.5 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்த மீதி 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 287.8 மில்லியனும் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 370.2 மில்லியனும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 281.4 மில்லியனையும் உள்ளடக்கி இருந்தமையால் நிலுவை வாடகை அறவிடுதல் தொடர்பாக தொடர்ச்சியான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வியாபார நிலையங்களை விடுவித்தமை, வாடகை உரித்து கைவிடப்பட்டமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்தமை போன்ற காரணங்களிக் அடிப்படையில் வாடகை உரிமையாளர்கள் செயலிழந்ததுடன், இந்த முறிவடைந்த கடன் பட்டோரிடம் இருந்து மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக செலுத்தும் திட்டம் ஒன்றை வழங்குதல், இறுதி அறிவித்தல் ஒன்றை விநியோகித்தல், பிடியாணை அனுப்புதல் போன்ற சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதுடன் மேலும் அறவிட முடியாது இருந்தமையை உறுதிப்படுத்தி வாடகை உரிமையாளர் மீதிகள் சகல அங்கீகாரத்துடனும் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செயலிழந்த வாடகை உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் படி பாதுகாப்பு வைப்பு, கேள்வி வைப்புப் பெறுமதி முறையே ரூபா 325.95	இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் இந்த 05 வருடங்களுக்கு	பாதுகாப்பு வைப்பு, கேள்வி வைப்பில் உள்ளடக்கப்பட்ட தீர்த்து வைக்க முடியுமான மீதிகளை இனங்கண்டு

	மில்லியன் மற்றும் ரூபா 26.42 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த வைப்பு மீதியில் 05 வருடங்களை விஞ்சிய பெறுமதி முறையே ரூபா 76.73 மில்லியன் மற்றும் 9.75 மில்லியன் ஆகும்.	மேற்பட்ட மீதிகள் அநேகமான பெறுமதி செயலில் உள்ள வாடிக்கையாளர்களுக்காக காணப்படுவதுடன் இந்த வைப்புக்களை மீள செலுத்துவதற்கு உரிய விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	விரைவாக தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பல்வேறு செயற்திட்டங்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,778 மில்லியன் முற்பணத் தொகையில் ரூபா 758 மில்லியன் முற்பணம் 05 வருடங்களை விஞ்சி இருந்ததுடன் அதில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் இடை நடுவே நிறுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் காணப்பட்ட போதிலும் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நீண்டகால ரீதியில் தீர்த்து வைக்கப்படாத முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு அதிகார சபையால் வினைத்திறனான மற்றும் செயற்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய மீதிகள் ஒவ்வொன்றும் பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நீண்டகால ரீதியில் தீர்த்து வைக்கப்படாத முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	அதிகார சபையால் காணி கைப்பற்றலுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்திற்காக ரூபா 27,659 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 591 மில்லியன் மாத்திரம் இழப்பீடாக செலுத்தப்பட்டமையால் இழப்பீடு செலுத்தும் செயன் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	இழப்பீடு செலுத்துதல் முறையாகவும், முறையாகவும் மேற்கொள்வதற்காக புதிய வழிகாட்டி ஒன்று அறிமுகப்படுத்துவதற்கும் இழப்பீட்டுப் பரிசோதனைகளை பூர்த்தி செய்து செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தை அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கைப்பற்றப்பட்ட காணிகள் கவனத்தில் கொள்ளக் கூடிய காலமாக கைப்பற்றப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது இருந்த காணிகளை உரித்தை இரத்துச் செய்வதற்கும் உள்ள இயலுமை தொடர்பாக நடவடிக்கைகளை	காணி கைப்பற்றலுக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தை விரைவாக செலுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(உ)	2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் வீடமைப்புத் தொகுதிக்காக கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் இருந்து கூட்டு ஆதன சான்றிதழ் பெற வேண்டி இருந்த போதிலும் 25 வீடமைப்புத் தொகுதிகளுக்கு இடையே குறைந்த வருமானம் பெறுகின்ற 06 வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் நடுத்தர வருமானம் பெறுகின்ற 02 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக மாத்திரம் கூட்டு ஆதன சான்றிதழ் பெறப்பட்டு இருந்தது. மேலும் அதிகார சபையினால் கூட்டு ஆதன சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமையினால் முகாமைத்துவ சபை ஸ்தாபிக்கப்படாது இருந்தமையால் 18 வீடமைப்புத் தொகுதிகளுக்காக 2022 ஆம் ஆண்டின் போது பொது பிரதேசங்களுக்கான மின்சாரத்திற்காக ரூபா 89.82 மில்லியனும் நீர்ப் பட்டியலுக்காக ரூபா 141.69 மில்லியனும் மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்காக ரூபா 223.06 மில்லியனுமாக கூட்டுமொத்தமாக ரூபா 454.57 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்தது.	குறைந்த வருமானம் பெறும் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக தகவல்கள் கூட்டு ஆதன அதிகார சபைக்கு வழங்குதல், குறைபாடுகளுடன் காணப்படுகின்ற செயற்திட்டங்களின் குறைபாடுகளைத் தயாரித்தல் அந்த அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு குறைபாடுகளை சரி செய்து கையளித்தல், கூட்டு ஆதன திட்டங்களைத் திருத்துதல் நில அளவையாளர்கள் மூலம் பெறப்படுகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்து கூட்டு ஆதன சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது சகல வீடமைப்புத் தொகுதி களிலும் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதுடன் அந்த சங்கங்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு பராமரிப்பு நடவடிக்கைகள் ஒழுங்கு முறையாக அந்த பிரதேச சங்கங்களுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.	கூட்டு ஆதன சான்றிதழை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் வீடு ஒன்றில் குடியிருப்பதற்காக அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் கீழ் உத்தியோகத்தரின் சம்பளத்தில் வீட்டு வாடகை அறவிட வேண்டியிருந்த போதிலும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 07 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 0.589 மில்லியன் தொகை, ஓய்வு பெற்றுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 2.183 மில்லியன் மற்றும் 23	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக பதிலளிக்கப்படவில்லை.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும்.

	ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 2.752 மில்லியன் வீதம் ரூபா 5.524 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.		
(எ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XIV அத்தியாயத்தின் 6.2 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெற்றுச் செல்கின்ற சந்தர்ப்பத்தில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் வீட்டை மீளக் கையளிக்க வேண்டியிருந்த போதிலும் வீட்டைப் பெற்ற ஏனைய அரச நிறுவனங்களில் 07 உத்தியோகத்தர்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஓய்வு பெற்றுச் சென்றிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய வீட்டை மீளக் கையளித்திருக்கவில்லை.	தற்போது அதிகார சபையின் ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன் வழங்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ இல்லம் மீள வழங்கப்பட்டதா என விடுவிப்பு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னர் தேவையான பரிந்துரை வழங்கல் வேண்டும். ஓய்வு பெற்று தொடர்ந்தும் வீடுகளில் குடியிருக்கின்ற ஏனைய அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு உள்ள வீட்டு அலகுகளின் 02 உரித்து அதிகார சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் 05 வீடுகள் அதிகார சபைக்கு கையளிக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	அரசாங்கத்தின் வீடுகளை மீளக் கையளித்தல் தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம் எந்த ஒரு அரசாங்க கணக்கில் மேலதிக பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ளதுடன் காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்காகவும் வங்கி மீதி போதியளவான பிரகாரம் இருக்கின்றதா என செலுத்துகின்ற உத்தியோகத்தர் கண்டறிய வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் 04 வங்கிக் கணக்குகளுக்கு உரிய ரூபா 25.5 மில்லியன் தேறிய மேலதிகப் பற்று நிதி காணப்பட்டது. அதில் 2020 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 1.24 மில்லியனும் 06	கணக்குகளின் பிரகாரம் மேலதிகப் பற்று மீதி காண்பிக்கப்பட்ட போதும் விநியோகிக்கப்பட்ட காசோலைகள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாமையினால் உள்ளபடியாக அத்திகதியில் இலங்கை வங்கிக் கணக்கில் மேலதிகப் பற்று மீதி காணப்படவில்லை. ரூபா 1.24 மில்லியன் ஆன அம்பாந்தோட்டை விருந்தினர் விடுதிக் கணக்கில் காணப்பட்ட மீதி தொடர்பாக இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இணக்கம் நடவடிக்கைகளின் இறுதியில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. ரூபா 300.16 மில்லியன் இது	அரசாங்கத்தின் கணக்குகளின் மூலம் மேலதிகப் பற்று வசதிகள் மூலம் பெற்றுக் கொள்ளாது இருப்பதற்கும் மேலதிக பற்று மீதிகளை இணக்கம் செய்து தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கணக்குகளுக்கு உரிய 2017 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற கூட்டு மொத்தமன ரூபா 300.16 மில்லியன் ஆன மேலதிக பற்று மீதியையும் இணக்கம் செய்து தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை.	தொடர்பான பதிலளிக்கப்பட வில்லை.	

3.4 விளைவற்ற அல்லது குறைவாகக் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அவிசாவளை நகர அபிவிருத்தியின் கீழ் 1998 ஒக்தோபர் 07 ஆந் திகதி இலக்கம் 1048/10 என்ற வர்த்தமாணியின் கீழ் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட 43 ஏக்கர் பரப்பளவை உடைய காணியில் 33 ஏக்கர் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கையேற்று 26 வருடங்கள் கடந்திருந்த போதிலும் எந்த ஒரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் காணி கைப்பற்றல் சாதாரண நடைமுறைக்குப் புறம்பாக விரைவாக கையேற்பதன் காரணமாக அந்தக் காணி உரிமையாளர்களின் இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 14.99 மில்லியன் வட்டித் தொகையும் அதிகார சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டு இருந்தது. இந்த காணியை கையேற்று எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஈடுபடுத்தாமையின் காரணமாக காடு வளர்ந்து இருந்ததுடன் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் மற்றும் பல்வேறு சமூக குற்றச் செயல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றமையும் அனுமதியற்ற பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	குறிப்பிடப்பட்ட விடயத்திற்கான காணி சீதாவாக்க கருமாந்த புர இல் அமுல்படுத்து வதற்கு இணையாக அதன் மூலம் கைத்தொழிலாளர்கள் மற்றும் ஊழியர் தரப்பினருக்காக விடுதி வசதிகளை வழங்கும் நோக்காகக் கொண்டு கைப்பற்றப்பட்ட போதிலும் அவற்றுக்காக தனியார் முதலீடுகளை வழங்குதற்கு வசதியீனமான நிலமை எழுந்திருந்தமை மற்றும் கவனத்தில் கொள்ளக் கூடிய விண்ணப்பங்கள் காணப்படாமையினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் வீடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாது இருந்தது. பிரதேசத்திற்கு உரிய அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக மீண்டும் காணியை கையேற்கும் போது காணப்படுகின்ற விலைகளுக்கு இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தமையால் இவ்வாறு கையேற்கப்பட்ட காணிப்பகுதி தேவையான போது காணப்படுகின்ற பெறுமதியினை கவனத்தில் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியுமாக இருந்தமையாலும் மற்றும் கைப்பற்றல் செலவினம், தற்போதய சந்தைப் பெறுமதியை ஒப்பீடு செய்து	சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கும் பாதுப்பதற்கும் முறையான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்துதல் வேண்டும்.

		நிதி நட்டம் ஏற்படாது இருந்தமையும் துண்டுக் கழிவுகள் அகற்றுதல் சமூக குற்றச் செயல்கள் மற்றும் அனுமதியற்ற பயிர்ச் செய்கைகளைத் தடுப்பதற்காக குறித்துரைத்த காணிப் பகுதிகளுக்கு உரிய கள உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களை தொடர்ச்சியாக பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ‘‘சுகித்த புரவர’’ நகர அபிவிருத்தி செயற்திட்டத்தில் ஒரு கட்டமான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 269.12 மில்லியன் ஆன 05 மாடிகளை உடைய 8032.9 சதுர மீற்றர் அளவான மஹர நிர்வாகம் மற்றும் வணிகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் அதிகார சபையால் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2024 சனவரி 30 ஆந் திகதி வரையில் இதில் 1164.9 சதுர மீற்றர் அளவு பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்களினால் பயன்படுத்தப்படுவதுடன் அந்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்து இடப்பட்டிருக்கவில்லை. மேலும் தற்போது வரையில் 6868 சதுர மீற்றர் அளவை உள்ளடக்கிய 428 இருக்கைகளை உடைய சகல வசதிகளையும் கொண்ட கேட்போர் கூடம் பயன்படுத்தாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு மின் பாரந்தூக்கி இயந்திரங்களும் செயலிழந்த நிலையில் காணப்பட்டன.	இந்த வணிக கட்டிடத் தொகுதி தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கான காலத்திற்காக 30 வருட வாடகையின் கீழ் மகர பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இரு தரப்பினர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து இடுவதற்காக தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அவ்வாறு இடவசதிகள் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யும் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் ஆக்கபூர்வமாக பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் மாத்திரம் சொத்துக்களை வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குதல் வேண்டும்.

(இ)	1949 ஆம் ஆண்டு முதல் காணி ஆணையாளர் நாயகத்தால் பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த பொரளை நகர மத்தியில் 04 ஏக்கர் 02 றூட் 17.09 பேர்ச் ஐ உடைய காணியில் 37.5 பேர்ச் பகுதி அதிகார சபையால் நடாத்திச் செல்லப்படுகின்ற பொலிஸ் திணைக்களத்தின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 27.6 மில்லியன் திறைசேரி நிதியேற்பாட்டை பயன்படுத்தி 95 கடைகளை உடைய இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று 2002 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் பிரகாரம் இந்தக் கடைகள் நீண்ட காலம் முதல் மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சில கடைகளின் கதவுகள் உடைத்து அனுமதியற்ற வகையில் குடியிருந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தமையும் வியாபார கட்டிடத் தொகுதியில் உள்ளே மற்றும் வெளியே துண்டுக் கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றமையும் பொலிஸ் நிலையத்தின் சுற்றாடல் பாதுகாப்பு நிலையத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.	குறித்த காணி கையேற்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பொலிஸ் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. இந்த வியாபார கட்டிடத் தொகுதி பொது மக்களுக்காக திறந்து வைத்து நடாத்திச் செல்வதன் மூலம் காணப்படு கின்ற பிரச்சனைகளை குறைக்கக் கூடியதாக இருந்தமையால் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	இந்த காணி கையேற்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கும், காணிகளின் ஆகக் கூடிய பயன்படுத்துவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான வேலைத் திட்டம் ஒன்று தாமதம் இன்றி அமுல்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	2020 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 20/1607/306/035 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் 2020 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பிற்காக நிதி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் 02 தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள 1.8274 ஹெக்ரேயர் அளவான கட்டிடத்துடனான மூன்று காணிகள் அதிகார சபையினால் கையேற்கப்பட்டு அபிவிருத்தி செய்து பொது மக்களுக்கு திறந்து வைக்க வேண்டி இருந்தமை மற்றும் அந்தக் காணிகள் வணிக மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுமாயின் அதன் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானத்தில்	முதலாவது முதலீட்டு முன்மொழிவைக் கோரி வெற்றியடையாது இருந்ததுடன் அந்த ஆதனங்கள் புட்டிக் ஹொட்டல் செயற்திட்டமாக அபிவிருத்தி செய்து நடாத்திச் செல்வதற்கான மாற்று வழிகளைப் பெற்று அந்தத் திட்டத்தின் கீழ் மீண்டும் முதலீட்டு முன்மொழிவைக் கோருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் உச்ச அளவில் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நகர அபிவிருத்தி அதிகார சபையால் உரிய காணி அபிவிருத்தி செய்யும் போது மற்றும் கைப்பற்றும் போது ஏற்படுகின்ற செலவினங்களை கழித்துக் கொண்ட பின்னர் பொறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையால் இந்த இரண்டு நிறுவனங்களும் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் பொருத்தமான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(உ)	கிருளப்பன புகையிரத நிலைய மாவத்தையில் 37 ஏக்கர் 01 றூட் 8.43 பேர்ச் அளவான காணி 1950 இன் 09 ஆம் இலக்க காணி கையேற்றல் சட்டத்தின் 38 (அ) உப பிரிவின் கீழ் பொது நடவடிக்கைகளுக்காக எனக் குறிப்பிடப்பட்டு 1984 யூன் 26 ஆந் திகதி இலக்கம் 303/4 என்ற வர்த்தமானியின் மூலம் அதிகார சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் 1986 ஆம் ஆண்டு முதல் 38 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கையேற்கப்பட்ட நிலத்தின் அளவில் 20 ஏக்கர் அளவு எந்த வகையிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. தற்போது இந்தக் காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருந்து வருகின்றமை , அவர்களை அகற்றுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை, அனுமதியற்ற வகையில் கழிவுப் பொருட்கள் போடப்பட்டிருந்தமை, பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்திருந்தமை, காணியில் காடுகள் வளர்ந்திருந்தமை, பல்வேறு குற்றச் செயல்களுக்காக ஈடுபடுத்துதல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டு இருந்தன.	இந்தக் காணியின் ஒரு பகுதி வீடமைப்புத் செயற்திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் வயல் காணியாகக் காணப்பட்ட இந்தக் காணியில் மண் நிரப்பி அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் அங்கீகாரம் வழங்காமையின் காரணமாக வீடமைப்பு அபிவிருத்தி திட்டமாக அந்த காணிப் பகுதியை கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப் படாது இருந்ததுடன் குறித்துரைத்த காணியின் பகுதி ஒன்று தனியார் உரிமையாளரின் கீழ் உள்ளதாகக் காண்பித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடைக் கட்டளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அந்தக் காணிப் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன் படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. இந்த காணிப் பகுதி காணிக் காவலர்களினதும்	சொத்துக்களில் உச்ச பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற்காக வேலைத் திட்டம் ஒன்று தாமதம் இன்றி அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன் பிரச்சினை உடனான நிலைமையை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பரிசோதகரினாலும் தொடர்ச்சியாக மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றது.

3.5 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீத்தொட்டமுல்ல புனர்வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் நகர பூங்கா ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது மண் சரிவுக்கு உட்பட்ட கழிவுப்பொருள் மலையினை ஒருநிலைபடுத்துவதற்காக போர்வைப் படையொன்றை ஈடுபடுத்துதல் மற்றும் பசுமை இல்ல வாயு வெளியேற்றல் அலகு ஒன்றை ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் 2020 யூன் 09 ஆம் திகதி ரூபா 269.6 மில்லியன் தொகையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 441.74 மில்லியன் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்த போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூங்கா நிர்மாணிக்கப் படாமல் இருந்ததுடன் சீரமைக்கப்பட்ட கழிவுப் பொருள் இடத்தில் தற்போது வரையிலும் புல் வளர்ந்து கைவிடப்பட்டிருந்தது. மேலும் இந்த இடத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்ட கழிவு நீர் அகற்றும் முறைமை மற்றும் வாயு அகற்றல் முறைமையில் முறையே 30 சதவீதம் மற்றும் 25 சதவீத அளவில் மாத்திரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	இந்த செயற்திட்டத்தில் மிகுதி வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு தனியார் துறையின் முதலீட்டாளரை தெரிவு செய்யும் வகையில் முதலீட்டு முன்மொழிவை கோருவதற்காக தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் இந்த அதிகார சபையால் தற்போதும் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் செயற்திட்டத்தை இனங்காணப்பட்டுள்ள காணியில் 12 ஏக்கர் அளவு இதுவரை அதிகார சபைக்கு காணி கையேற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் கையேற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது இருந்தமையால் முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான செயற்பாடுகள் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது.	திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தாமையின் அடிப்படையில் ஏற்பட்டு இருந்த நிலைமையை ஆய்வு செய்து அதற்குரியதாக இனங்காணப்பட்ட பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் செயற்திட்டத்தை கால ரீதியில் அமுல்படுத்தாமையின் அடிப்படையில் எழக் கூடியதாக இருந்த நிதி நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றத்தை கட்டி எழுப்புவதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட	அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றுக்கள் கணக்காய்வின் போது முதலீட்டு ஆதனங்கள் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு எடுத்தல் தொடர்பான	வருடாந்த நிதிக் கூற்றுக்கள், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள்

செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நீதிச் சட்ட நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் ஆண்டின் இறுதியில் 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 02 வருடம் ஒரு மாத தாமதத்துடன் 2025 மார்ச் 18 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தமையால் முதலீட்டு ஆதனங்களை மதிப்பீடு செய்து பூர்த்தி செய்து அந்த பெறுமதியை கணக்குகளுக்கு கொண்டு வந்து கணக்குகளை தயாரிப்பதற்கு போதியளவான காலம் எடுத்திருந்தது. 2023 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகளுக்கு உரியதாக மேற்கொள்ள வேண்டிய கணக்கீட்டு சீராக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டு அந்த நிதிக் கூற்றுக்களை கூடிய விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.